சிவமயம்

நாவலர் சனசமூக நிலையம்
பதிவு இல. 5
ஸ்தாபிதம். 1969
அனலைதீவு - 2



# தேவி தோத்திரத் திரட்டும் நயினை வரலாறும்

தொகுத்தவர்:
சைவப்புலவர், திரு. நா. வி[illegible]வலிங்கம்
அவர்கள்

நயினாதீவு யாத்திரீகர் தொண்டர் சபை
வெளியீடு 3.

15-6-1969

தொண்டர் சபைக் காரியாலயம்
நயினாதீவு 1

உ

சிவமயம்



சனசமூக நிலையம்
பதிவு இல. 5
1969 ஸ்தாபிதம்.
அனலைதீவு - 2

# தேவி தோத்திரத் திரட்டும் நயினை வரலாறும்

தொகுத்தவர்:

சைவப்புலவர், திரு. நா. விஸ்வலிங்கம் அவர்கள்

## நயினாதீவு யாத்திரீகர் தொண்டர் சபை

வெளியீடு 3.

15-6-1969

தொண்டர் சபைக் காரியாலயம்

நயினாதீவு 1.

# பதிப்புரை

உலக மாதாவாகிய அன்னை பராசக்தியின் திருவருட்டுணை கொண்டு 'தேவி தோத்திரத் திரட்டும் நயினை வரலாறும்' என்னும் இச்சிறு வெளியீட்டினை, தொண்டர் சபையினராகிய யாம் மகிழ்வுடன் வெளியிடுகின்றோம்.

'அளப்பில கீதஞ் சொன்னார்க் கடிகள்தாம்
அருளுமாறே'

என்பது ஆன்றோர் வாக்கு.

இவ்வெளியீட்டில் நயினாதீவின் பூர்வ வரலாறு பற்றி மிகச் சுருக்கமாகத் தரப்பட்டுள்ளது. அத்துடன் மகா பராசக்தியைப் பற்றிய பாடல்களுடன் நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணி அம்மையைப் பற்றிய பாடல்களும் விசேடமாகச் சேர்க்கப்பட்டுள்ளன.

இந்நூலைத் தொகுத்து வெளியிட உதவிபுரிந்த தொண்டர்சபைத் தலைவரும், சைவப் புலவருமாகிய தலைமையாசிரியர், திரு. நா. விசுவலிங்கம் அவர்கட்கு தொண்டர் சபையாரின் நன்றி உரியதாகுக.

குற்றங் களைந்து குணம் கொள்க.

மு. க. பொன்னம்பலம்
கௌரவ காரியதரிசி
நயினாதீவு யாத்திரீகர் தொண்டர் சபை

# நயினாதீவின் வரலாறு

சக்தி வழிபாடு உலகின் பல பாகங்களிலும் பரந்த ஒரு வழி பாட்டு முறையாக விளங்கிவருகிறது. சில அடிப்படைகளில் சிவ வழிபாட்டிலும் பார்க்கச் சக்தி வழிபாடே சிறந்தது எனக் கருது வோரும் பலர் இருக்கின்றனர். முக்கியமாக இந்தியாவில் வங் காள இராச்சியத்தில் சிவ வழிபாட்டிலும் பார்க்கச் சக்தி வழி பாடே பரவலாகக் காணப்படுகிறது. அங்குள்ளோரில் அதிகமா னோர் சக்தி உபாசகர்களாகவே காணப்படுகின்றனர்.

அத்தகைய சக்தி வழிபாட்டுக்குரிய பல ஸ்தலங்களில் ஈழத் திலுள்ள நயினாதீவும் ஒன்றாகும். அறுபத்து நான்கு சக்திபீடங் களுள் ஒன்றாகிய புவனேஸ்வரி பீடம் அமைந்துள்ள திருத்தலம் நயினாதீவே ஆகும். காளிதாசனால் பக்தியுடன் பரவப்பட்ட திருத் தலங்களுள் ஒன்று நயினாதீவு என்னும் இத்திருத்தலம்.

இங்கு கோவில் கொண்டெழுந்தருளி இருக்கும் ஸ்ரீ நாகபூ ஷணி அம்பிகையின் திருக்கோவில் வரலாறு சரித்திரத்துக்கு முற் பட்டதாகக் கருதப்படுகின்றது. உலகிலே சர்ப்பவழிபாடு தோன் றிய அதே காலத்திலேயே இங்கும் சர்ப்பவழிபாடு ஆரம்பமாகி இருக்க வேண்டுமென அறிஞர்கள் கருதுகின்றனர். ஆலயக்கற்ப் பக்கிருகத்தில் வீற்றிருந்து அடியார்க்கு அருள் பாலிக்கும் நாக விக்கிரகம் காந்தார சிற்பகாலத்தைச் சேர்ந்ததென தென்னிந் திய சிற்ப ஆராய்ச்சி வல்லுனர் K. M நரசிம்மன் அவர்கள் கூறி யுள்ளார்கள். எனவே, இலங்கைத் திருக்கோவில்களில் அமைந் துள்ள எந்த மூலவர் விக்கிரகத்துக்கும் காலத்தால் முற்பட்டது நயினை நாகபூஷணி அம்பிகை ஆலய விக்கிரகமே ஆகும்.

அம்பிகையின் ஆலய வரலாறு பற்றிய காலக்கிரமத்தை உறு திப்படுத்தக் கூடிய சரித்திரச் சான்றுகள் எதுவும் இது வரை கிடைத்திலது.

தான் தோன்றியாக மண்ணினின்றும் தோற்றியருளிய அம் பிகையின் திருப்படிமத்தை இந்தியாவிலிருந்து இங்கு வந்த நயினா பட்டர் என்னும் அந்தணர் பூசித்து வந்தார். அக்காலத்தில் நயினாதீவுக்கு அண்மையிலுள்ள புளியந்தீவிலிருந்த நாகமொன்று அம்பாளை அர்ச்சிக்கத் தினந்தோறும் கடலைக் கடந்து வருவது வழக் கம். அங்ஙனம் வரும்போது அம்பாளின் அர்ச்சனைக்கு வேண்டிய

பூக்களையும் புளியந்தீவிலிருந்தே கொண்டு வருவதும் அதன் வழக்க மாகும்.

ஒரு நாள் வழமைபோல அந்நாகம் பூவினை எடுத்துக் கொண்டு கடலில் நீந்திவருவதை உயரத்தே பறந்து வந்த பருந் தொன்று கண்டது. பருந்தைப் பாம்பும் கண்டது. பருந்தைக் கண்ட பாம்பு கடலுள் இருந்து ஓங்கி வளர்ந்து நீரின்மேல் எழுந்திருந்த கற்பாறை ஒன்றை அடைந்து ஒரு பெரிய இன் னலை எதிர்பார்த்து நின்றது. பாம்பைக் கண்ட கருடன் அதைக் கொன்று தொலைக்க எண்ணியது. பாம்புக்கும் கருடனுக்கும் பெருஞ் சண்டை மூண்டது.

இதே வேளையில் காவிரிப்பூம்பட்டினத்திலிருந்து வாணிப நோக்கமாக இலங்கை வந்து கொண்டிருந்த கப்பல் ஒன்றி லிருந்து மாநாயக்கன் என்னும் வணிகன் அவற்றின் பூசலைக் கண்டான். அவற்றுக்கிடையே நடைபெற்றுக் கொண்டிருக்கும் போரைத் தவிர்த்து நாகத்தைக் காப்பாற்ற எண்ணினன்.

நாகம் அம்பிகையை வணங்கச் செல்லும் விபரத்தைக் கூற, அதனைக் கொல்லாது விடுமாறு வேண்டினன். அப்போது கருடன் வணிகனைப் பார்த்து "ஐயா பெருவணிகரே அம்பாள் மீது உமக்கு இத்துணை பக்தி இருக்குமெனின் உமது கப்பலில் உள்ள பொருள் அத்தனையையும் அம்பாளின் ஆலயத்துக்களிப் பீரா? அவ்வாறு செய்யின் நானும் இதனைக் கொல்லாது விடு கின்றேன்" என்றது. வணிகனும் தனது கப்பலில் இருந்த திர வியம் முழுவதையும் அம்பாளின் ஆலயத்துக்கே வழங்கினன். கருடனும் பாம்பைக் கொல்லாது விட்டது. அப்பாம்பு சுற்றி இருந்த கல்லே இப்பொழுது பாம்பு சுற்றியகல் என வழங்கப் படுகிறது. அவ்வணிகன் வழங்கிய பொருள்களைக் கொண்டே அம்பிகையின் ஆலயம் முதன் முதலில் சிறப்புற அமைக்கப் பெற்றது. அவ்வாலயத்தையும் அவ்வணிகனே நிர்வகித்து வந் தான். இப்பகுதியில் வழங்கும் கர்ணபரம்பரைக் கதையிலிருந்து மேற்குறித்த செய்தி தெரியவருகிறது.

இவ்வாறு செம்மையுற அமைக்கப்பெற்ற ஆலயம் ஒல்லாந் தர் காலத்தில் இடித்துத் தரைமட்டமாக்கப் பட்டது. ஆலயத் தின் பழைய கட்டிடப்பகுதிகளில் சில நயினதீவைச் சுற்றியுள்ள சமுத்திரத்தின் அடியிற்கிடப்பதை இன்றுங் காணக் கூடியதாக உள்ளது.

ஐம்பெருங்காப்பியங்களுள் ஒன்றான மணிமேகலை, நயினா தீவை மணிபல்லவம் என்று குறிப்பிடுகிறது. இங்கு அக்காலத்தில் அமைந்திருந்த பழம் பிறப்புணர்த்தும் பௌத்த பீடிகையின் சிறப்பையும், ஆபுத்திரனால் கோமுகிப் பொய்கையில் இடப்பட்டு பின்னர் கோவலன் மகள் மணிமேகலையின் கைக்குக்கிடைத்த அமுதசுரபி என்னும் பிட்சாபாத்திரம் பற்றிய செய்தியையும் அந்நூல் வாயிலாக நாம் அறிகின்றோம். அதன் பெறுபேறு தானோ இன்று இத்தலத்தில் அமுதசுரபி எனும் பெயர் கொண்டு அமைக்கப்பட்டிருக்கும் அன்னதான மண்டபம் அடியார்க்கு அன்னதானம் அளித்து வருகின்றது.

குலோதர, மகோதர என்னும் இரு நாக அரசர்களுக்கிடையே ஒரு மணியாசனம் காரணமாக எழுந்த பெரும்போரை விலக்கப் பகவான் புத்தர் இங்கு எழுந்தருளியதாகப் பௌத்த நூல்கள் கூறுகின்றன. இத்தலத்திலுள்ள சில இடங்களின் பெயர்களும், சிதிலமடைந்து கிடந்த பௌத்த கோவிலின் சுவடுகளும் பௌத்த சமயத்துக்கும் நயினாதீவுக்கும் இடையிலுள்ள தொடர்பை நன்கு வலியுறுத்துகின்றன.

இவ்வாறு இந்து மக்களுக்கும் பௌத்த மக்களுக்கும் புண்ணிய ஸ்தலமாக விளங்கும் இந்நயினாதீவு மூர்த்தி, தலம், தீர்த்தமென அத்தனையும் பெற்ற ஓர் அற்புதத் திருத்தலமாகும்.

சனசமூக நிலையம்
பதிவு இல.
ஸ்தாபிதம் 1969
அனலைதீவு - 2

உ

சிவமயம்

# விநாயகர் துதி

---

மலரயனும் திருமாலும் காணுமை பதியங்கப்
புலிமுனியும் பதஞ்சலியும் கண்டுதொழப் புரிசடையார்
குலவிய நடந்தருந் தில்லைக் குடதிசைக் கோபுரவாயில்
நிலவிய கற்பகக்கன்றின் மலர்த்தாளிணை போற்றி.

— பெரிய புராணம்

---

பூரணி புராதனி சுமங்கலி சுதந்தரி
புராந்தகி த்ரியம் பகியெழில்
புங்கவி விளங்கு சிவசங்கரி சகஸ்ரதள
புட்பமிசை வீற்றிருக்கும்
நாரணி மனேந்த நாயகி குணுதீத
நாதாந்த சக்தி என்றுன்
நாமமே உச்சரித் திடும்படியர் நாமமே
நானுச்ச ரிக்க வசமோ
ஆரணி சடைக்கடவுள் ஆரணி எனப்புகழும்
அகிலாண்ட கோடி யீன்ற
அன்னையே பின்னையும் கன்னியென மறைபேசும்
ஆனந்த ரூப மயிலே
வாரணியு மிருகொங்கை மாதர்மகிழ் கங்கைபுகழ்
வளமருவு தேவ யரசே
வரைராசனுக் கிருகண் மணியாய் உதித்த
மலைவளர்கா தலிப்பெண் உமையே.

— ஸ்ரீ தாயுமான சுவாமிகள் பாடல்

*

உ

# நயினை நாகபூஷணியம்மை

## திருவிருத்தம்

சந்திரபூ ரணரத்ன தங்ககோ டக்கிரிட
தண்ணின்ற தவழ வட்டத்
தனபதியை நிகர்மன்ன ரடிதொழச் சதுரங்க
தானைவெள் ளங்கள் சூழச்
சிந்துரப் பகைமைபீடர் பீடிகை யிருந்தெண்டி
சாமுகமு மேயி றைஞ்சத்
தேவேந்ர சுகமுற் றிருப்பவர்க ளுன்பாத
சேவைபுரி பவர்க ளன்றோ
மந்திர காரண ரூபரூ பாதிசிவ
மகமாயி புவன நேசி
வாலசுந் தரிகௌரி நயினைமா நகர்க்கண்
வைகியருள் செய்யு மொருதாய்
நந்துறு கரன்பிரம னங்கமணி கங்களொடு
நஞ்சணி பிறங்கு களமே
நாகமணி யும்பரமர் பாகமுறு மேகசிவ
நாக ஈஸ்வரி யம்மையே.

சோடுற்ற நவரத்ன கும்பியும் மேலிட்ட
தொங்கலும் அகில லாவிச்
சொருகிட்ட கொண்டையுஞ் சுட்டியும் மலர்க்கையால்
தொட்டிட்ட சிந்தூ ரமும்
தோடுற்ற கொந்தழக மரகதக் கொப்புமாரி
துணைவிழியி லெழுது மையும்
துகளற்ற வெண்டரள முருகுநற் பவளவாய்த்
துவருமொளிர் நளின முகமும்
தேடுற்ற செங்கமல பொற்பதமு மழகான
திருவுருவு மறிவி னாலே
தெரிசிக்க வருடந்து நீடாயு ளும்பெருஞ்
செல்வ முந்தர வேண்டுநீ
நாடுற்ற பலவளமு முறையுமெழில் நயினை
நகர்க்கண் மருவுங் கௌரியே
நாகமணி யும்பரமர் பாகமுறு மேகசிவ
நாக ஈஸ்வரி யம்மையே.

நாவலர் சனசமூக நிலையம்
பதிவு இல. 5
ஸ்தாபிதம். 1969
அனலைதீவு - ௨

ஆரணத் துபநிடத வக்கரத் தொனியாகி
யாகாய வட்ட மாகி
அறுகோண மிருகோண முக்கோண நாற்கோண
மாகிநிற மைந்து மாகி
காரணத் துருவாகி யருவாகி யாவுமாய்க்
காக்குமுன் பெருமை யெளிதோ
கருணைப்பிர வாகமா மானந்த வெள்ளங்
கசிந்தூ றுபே ராழியே
ஏரணைத் திடுமருத வேலிசூழ் நயினை
யெனும்பதி சிறந்து மேவும்
யாமளா சௌந்தரீ கோமள சொரூபியே
ராசபர மேசு வரியே
நாரணற் கொருசகோ தரியென்ன வந்தருளும்
நாக பூஷணி நாரணீஇ
நாகமணி யும்பரமர் பாகமுறு மேகசிவ
நாக ஈஸ்வரி யம்மையே.

சத்திபை ரவிகௌரி அக்கணியு முக்கணீ
சடாதரி சடாட்ச ரத்தி
சங்கரி சுமங்கலி மதங்கியரு ளம்பிகை
சவுந்தரி சண்ட சண்டி
உத்தமி பராபரை மனோன்மணி சிவானந்தி
யுமையிமைய மூதவு மங்கை
உலகுதவு மன்னையா மனைபொன்னி னம்பலவ
ருடனிட மகிழ்ந்து மேவும்
நித்தியகல் யாணிசாம் பவிபுவன கௌமாரி
நிமலமக மாயி யென்றே
நெஞ்சில்நித முந்நினைவு தந்துனை வணங்கவரு
நின்னடி யவர்க் கருளுவாய்
நத்துலவு சுத்தமணி மெய்துநயி னைநகரில்
நாளுமுறை யாழின் மொழியே
நாகமணி யும்பரமர் பாகமுறு மேகசிவ
நாக ஈஸ்வரி யம்மையே.

ஆகமது கூனித் தளர்ந்துரோ மம்வெளுத்
தைம்புல னொடுங்கி மேலாம்
அறிவழிந் தைமே லெழுந்ததீ தத்தினுயி
ரனுகுமக் காலை தனில்
வேகவெங் கடமைபிடர் நெளியவரு குமனெற்கு
விடுகயிறு முடுகி யடுமுன்
வினையேனை யஞ்சலென் றுனதுநா யகருடன்
வெள்ளை விடைமீ தேறியே
பாகமுற வந்துநின் றடிமைகொண் டெனையும்நீ
பாதுகாத் தருள வேண்டும்
பைங்குலைத் தெங்கிளஞ் சோலைசெறி நயினைநகர்
பண்பு கொண்டுறை செல்வியே
நாகமடர் தாருவென மேவிமுனி வோர்களுறை
நாடிவரு கோப விடமார்
நாகமணி யும்பரமர் பாகமுறு மேகசிவ
நாக ஈஸ்வரி யம்மையே.

மாற்றிற் சிறந்தபொற் குவையென்ன வளர்சாலி!
வயலிற் கிடந்த நத்தம்
மடையிற் றவழ்ந்தேறி மனையிற் புகுந்துழவர்
மனைமுன்றி லீனு முத்தை
ஆற்றிற் சிறந்திடத் தண்டுலங் களையுநீர்
அள்ளிப் புறத்தின் மேவி
அருகுற்ற சோலையினு மிகுதுற்ற வாவியினு
மரவிந்த வோடைக ளினும்
காற்றிற் சிறந்துலவு கால்கொண் டுலாவக்
கயற்கண்ணி வந்து மோதக்
கமுகினிற் றெங்கினிற் கதலியில் வருக்கையிற்
கனியு மடலுஞ் சிதறியே
நாற்றிற்கு மேகமழு மதுமாரி சொரியுநயி
னநகரி னன்னு முமையே
நாகமணி யும்பரமர் பாகமுறு மேகசிவ
நாக ஈஸ்வரி யம்மையே.

வன்கய மருப்பென நிமிர்ந்தடி பருத்திறுகி
மணிவா ரறுத்து விம்மி
வட்டமிட் டெழுகும்ப முலைமுகங் காட்டியிரு
மகர விழிவலை வீசியே
மின்கய மதப்பொருள் உள்ளம தலைத்துள
வெறுக்கையைப் பற்றி யேற்கும்
வேசியர் தனக்கடிமை செய்விக்கு மென்னைமுன்
வினைநூறி யருளு தவுவாய்
பொங்கிடு நெடுந்திரைப் புணரிநாற் றிசையும்
பொருந்தநடு மேவி யுலகிற்
புகழ்பெருகு நயினைமா நகரினி லிருந்துமிகு
புதுமைதரு புனித தாயே
நன்கிய விளம்பிறையொ டொன்றை வேண்டிச்சடில
நன்பு கொண்டிடு நஞ்சுமார்
நாகமணி யும்பரமர் பாகமுறு மேகசிவ
நாக ஈஸ்வரி யம்மையே.

சம்புசிவ சங்கர திகம்பர நடம்புரி
சமர்த்தாதி யாதி யாய
தற்பர மதிச்சடில முக்குண சதுர்ப்புய
சதாசிவ சிவாசி வாய
எம்பரம வென்றுபதி னெண்கணமு மிம்பரு
மிறைஞ்சிவரு கணவருடனே
இங்கித முடன்கயிலை தங்கியுறை யம்பிகையி
னின்புக ழியம்ப வெளிதோ
அம்புய மடந்தைய ரரம்பையர் வயந்தமுவு
மரியநவ சக்தி களெலா
மன்பினொடு தொண்டுசெயு முந்தனர விந்தபத
மந்தநிழல் தந்த ருளவாய்
நம்பிவரு தொண்டர்பெற மங்கல மிகுந்தநயி
னநகரி னண்ணு முமையே
நாகமணி யும்பரமர் பாகமுறு மேகசிவ
நாக ஈஸ்வரி யம்மையே.

கந்தான சொசியச் சினக்கும் கடாதடக்
　　கைமலை முகத்த வுணனைக்
கால்கொண் டுதைத்தவன் றோலுரித் துப்போர்த்த
　　காத லனைமன் ருடியே
முந்தாத ரத்தினொடு மிருநாழி நெற்பெற்று
　　முடிவிலா துயிர்க ளுய்ய
மூப்பத் திரண்டறந் தன்னையுத வியவன்னை
　　மூவுலகு நீயா கையால்
சிந்தா குலங்கொண்டு யான்திரிதல் நீதியோ
　　தினந்தி னம்சொல வேண்டுமோ
திருவுள மிரங்கியே சற்றுன் கடைக்கண்
　　திருப்பி னல்வெகு பாரமோ
நந்தாத வரமுதவு நங்கையே நயினை
　　நகர்க்கண் மருவும் கௌரியே
நாகமணி யும்பரமர் பாகமுறு மேகசிவ
　　நாக ஈஸ்வரி யம்மையே.

சீர்தங்கு தண்சுனை யெனச்சேர் மனத்திற்
　　றினைத்துக் குழைத்த ரும்பும்
செஞ்சரண கஞ்சமலர் தஞ்சமெனு மென்புன்
　　சிரக்கஞ்ச மீதில் வைத்தே
ஏர்தங்கு நல்லருட் பேறுதவி நெஞ்சத்
　　திடுக்கண் தவிர்த்து அஞ்சேல்
என்றுமுன் நின்றெமக் கீடேற்ற முதவுவார்
　　யாருன்னை யின்றி யம்மா
பேர்தங்கு மகிலாண்ட டுக்குமதி லூறுபொருட்
　　பிரிவுஞ் சராச ரமெனும்
பேருயிர்க ளுந்தந்து பாதுகாத் தருளுமுன்
　　பெருமையாம் பாட வெளிதோ
நார்தங்கு சற்குணத் தொண்டருய வென்றுநயி
　　னுநகரி னண்ணு முமையே
நாகமணி யும்பரமர் பாகமுறு மேகசிவ
　　நாக ஈஸ்வரி யம்மையே.

சனசமூக நிலையம்
பதிவு இல. 5
ஸ்தாபிதம். 1969
அனலைதீவு - 2

வரகவி, திரு. சி. முத்துக்குமாருப்புலவர்.

# சக்தி தோத்திரங்கள்

## கலித்துறை

(1) உதிக்கின்ற செங்கதிர் உச்சித் திலக முணர்வுடையோர்
மதிக்கின்ற மாணிக்க மாதுளம் போது மலர்க்கமலை
துதிக்கின்ற மின்கொடி மென்கடிக் குங்கும தோயமென்ன
விதிக்கின்ற மேனி யபிராமி யென்றன் விழுத்துணையே

(2) தனந்தரும் கல்வி தரும்ஒரு நாளுந் தளர்வறியா
மனந்தருந் தெய்வ வடிவுந் தரும்நெஞ்சில் வஞ்சமில்லா
இனந்தரும் நல்லன வெல்லாந் தருப்அன்பர் என்பவர்க்கே
கனந்தரும் பூங்குழ லாள்அபி ராமி கடைக்கண்களே

— அபிராமி அந்தாதி

## விருத்தம்

(3) தொல்லையென யுந்தனுக்குந் தோன்றிலையோ வென்கவலை
இல்லையோ தெய்வம் இருந்தால் இரங்காதோ
முல்லையுடன் வில்வவன முத்தி தருஞ் சுப்புலிங்கச்
செல்வரைப் பூசித்த தேவிஅகி லாண்டவளே

(4) உன்னைவிட வேறெனக்கிங் குற்றதுணை யேறுமுண்டோ
இன்னிலத்தில் வாடி இருப்பதுனக் கழகோ
பன்னரிய வேதப் பழம்பொருளே பங்கயத்தின்
அன்னமே தென்காவு வாழுமகி லாண்டவளே

— திரிசிபுரம் திருவானைக்கா அகிலாண்டேஸ்வரி பதிகம்

## அறுசீர் விருத்தம்

(5) அங்கையிற் கரகந் தாங்கும் பிரமாணி யருளி னேடும்
துங்கமென் சென்னி காக்க வயிணவி துகளி வாதம்
எங்கணும் காக்க செய்ய வேத்தெழி லுருத்தி ராணி
தங்குமென் டிசையு மன்பு தழைத்திட வினிது காக்க

— சக்தி கவசம்.

## வேறு

(6) திடமுடனே யுனைப்பாடச் செல்வமுண்டாங்
கல்வி யுண்டாம்
அடைவுடனே இப்புவியில் யெந்தனிட மொழிக்கிரங்கி
அருளே செய்து
சடைமுடியார் இடப்பாகம் பச்சைநிற மாய்நின்ற
தையல் மானே
மடமயிலே உன்னுடைய மலர்ப்பாதந் தந்தருள்வாய்
மதுரைத் தாயே.

— மதுரை மீனாட்சியம்மன் விருத்தம்.

## ஆசிரிய விருத்தம்

(7) சுந்தரி சவுந்தரி நிரந்தரி துரந்தரி
சோதியாய் நின்ற உமையே
சுக்கிர வாரத்தி லுனைக்கண்டு தரிசித்தவர்கள்
துன்பத்தை நீக்கி விடுவாய்
சிந்தைதனில் உன்பாதந் தன்னையே தொழுமவர்கள்
துயரத்தை மாற்றி விடுவாய்
ஜெகமெலாம் முன்மாயை புகழவென் னலாமோ
சிறியனால் முடிந் திடாது
சௌந்தவுன் மைந்தனு யெந்தனை யிரட்சிக்கச்
சிறியகடன் உன்ன தம்மா
சிவசிவ மகேஸ்வரி பரமனிட ஈஸ்வரி
சிரோன்மணி மனோன் மணியுநீ
அந்தரி துரந்தரி நிரந்தரி பராம்பரி
அநாதரட் சகியும் நீயே
அழகான காஞ்சியிற் புகழாக வாழ்ந்திடு
மம்மை காமாட்சி உமையே.

— காமாட்சியம்மன் விருத்தம்,

(8) தாயது வயிற்றிலே மாயமாய்த் தரித்துநான்
தங்கினேன் அங்கு சிலநாள்
தாரணியில் வீழ்ந்தபின் புழுதியில் புரண்டும்
தவழ்ந்தடி நடந்து சிலநாள்
காயமும் வளர்ந்திந்தப் பாரினில் உழன்றுமிகக்
களையாய்த் திரிந்து சிலநாள்
காமனால் வதங்கியே ஊமைபோல் மயங்கிக்
கருத்தது வழிந்து சிலநாள்
மாய்கையால் லோக வாழ்க்கைதனை மெய்யென்று
மயங்குதென் மனதி லம்மா
மாருகப் பிறவியது யாரா லெடுக்கதா
மைந்தன் சுமக்க வசமோ
தாயென்று உன்னைநான் நம்பினேன் அருள்புரிவை
தரணிபுகழ் ஒற்றி யூர்வாழ்
தங்கமலர் நாதர்சடை சங்கைஉரு வானகொடி
திங்களொளி வான வடிவே

— வடிவுடையம்மன் விருத்தம்.

(9) நித்தமும் உந்தனிட பாதார விந்தத்தை
நிசமதாய் நம்பி னோர்க்கு
நெடுநாளு மகலாத பிணிதீர்த்து நிலைதந்து
நித்திய மங்கள முதவுவாய்
பக்தியாய் உனைநம்பும் அடியரைக் குடியாக்கிப்
பாத தெரிசனை யருளுவாய்
பரிகாச மாகவே நிந்தைசெய் மூடரைப்
பதுமைபோ லாட்டி வைத்து
செத்திடும் பிரேதமாய் நித்தியமுழு மூடராய்
திருகிப் பிடுங்கி வைப்பாய்
செம்பவள வல்லியே உந்தனிட மகிமையைச்
செப்புதற் கெளிதா குமோ
சித்தியாய் மனமகிழ வீராம்பட் டினத்தில்
திரைகடலி னோரம் வாழும்
செங்கண்மால் தங்கையே எங்கள்குல தெய்வமே
செங்கழனி மாரி யுமையே.

— வீராம் பட்டணம் மாரியம்மன் விருத்தம்.

## அறுசீர் விருத்தம்

(10) அரவுண்ட நஞ்சமது திரயெண்பு அருமங்கை யாகிவரவும்
பெருநீரி லோலைஎதி ரேறமாறன் பிணியான வெப்பகலவும்
திருவார்த்த ஞானவமு தங்கறந்து சீர்காழி யற்கு தவவே
வருசெல்வியுண்ணு முலைநாம தேவி வரவேண்டுமென் றனருகே
— திருவண்ணுமலை உண்ணுமுலை யம்மன் பதிகம்.

(12) மூவுலகு மிடரியற்று மடலவுண
னுயிரொழிய முனிவு கூர்ந்து
பூவையுறழ் திருமேனி யருட்கடவு
ளகன்மார்பிற் பொலிந்து தோன்றித்
தேவருல கினும்விளங்கும் புகழ்க்கொல்லா
புரத்தினிது சேர்ந்து வைகும்
பாவையிரு தாடொழுது பழமறைதேர்
குறுமுனிவன் பழிச்சு கின்றான்.

— இலக்குமி தோத்திரம்.

## கலித்துறை

(13) பாதாம் புயத்திற் பணிவார் தமக்குப் பலகலையும்
வேதாந்த முத்தியுந் தந்தருள் பாரதி வெள்ளிதமிழ்ப்பூஞ்
சீதாம் புயத்தில் இருப்பாள் இருப்பவென் சித்தையுள்ளே
ஏதாம் புவியில் பெறலரி தாவ தெனக்கினியே.

— சரஸ்வதி யந்தாதி.

(14) நாடும் பொருட்சுவை சொற்சுவை தோய்தர நாற்கவியும்
பாடும் பணியிற் பணித்தருள் வாய்பங்க யாசனத்திற்
கூடும் பசும்பொற் கொடியே கனதனக் குன்றுமைம்பால்
காடுஞ் சுமக்குங் கரும்பே சகல கலாவல்லியே.

— சகல கலா வல்லி மாலை.

# நயினை ஸ்ரீ நாகபூஷணியம்மை
# திரு ஊஞ்சல்

## காப்பு

சீர்பூத்த தென்னிலங்கை தன்னின் மேவும்
திரைபூத்த கடனயினை நகரில் வாழும்
ஏர்பூத்த நாகேசு வரியைப் போற்றி
இசைபூத்த செந்தமிழா லூஞ்சல் பாட
ஆர்பூத்த சடைமௌலி யரனு ரீன்ற
அருள்பூத்த வறிவிச்சை தொழிலென் ருேதும்
கார்பூத்த மும்மைமத களிற்றின் பாதம்
கரம்பூத்த மலர்கொண்டே கருதி வாழ்வாம் (1)

பலஞேங்கு செம்பவளங் கால்க ளாக
பகர்வைர ரத்தினமே விட்ட மாக
குலஞேங்கு வெண்டரளங் கயிற தாக
கூறரிய மாணிக்கம் பலகை யாக
வலஞேங்கு மூஞ்சன்மிசை யினிது வைகி
மலர்மகளுங் கலைமகளும் வடந்தொட் டாட்ட
நலஞேங்கு திருநயினை நகரில் வாழும்
நாகபர மேஸ்வரியே யாட ருஞ்சல் (2)

உவகையொடு மலரயன்மால் கரங்கள் கூப்ப
ஓசைமணி வாயிலட்ட பாலர் காப்ப
தவமறையோர் தூபமொடு தீபங் காட்ட
தாழ்ந்துகண நாதர்புகழ் மாலை சூட்ட
அவிரிடப துவசமகல் வானந் தூர்ப்ப
அனந்தன்முத லுரகர்செய செயவென் ருர்ப்ப
நவையறுசீர் நயினைநகர் தன்னில் வாழும்
நாகபர மேஸ்வரியே யாட ருஞ்சல் (3)

கொம்பினொடு துடிமுரசு முழவ மோங்க
குடைகளுட னலவட்டம் குழுமி யோங்க
தும்புருநா ரதர்வேத கீதம் பாட
தொண்டரக மகிழ்ந்துசுக வாழ்வு கூட
வம்பவிழு மலர்மாரி யமரர் பெய்ய
வரமுனிவ ரடிபரவி யாசி செய்ய
நம்புமடி யவர்க்கருளி நயினை வாழும்
நாகபர மேஸ்வரியே யாட ரூஞ்சல் (4)

அன்னநடை யயிராணி கவிகை தாங்க
அயிலனிகர் விழியரம்பை களாசி யேந்த
வன்னமுலை யுருவசிவெண் கவரி வீச
மணிகொள்கிரு தாசிகமண்ண டலங்கைக் கொள்ள
மின்னிடைமே னகைவெள்ளிலை பாகு நல்க
வியந்திலோத் தமைவிகித நடனஞ் செய்ய
நன்னயஞ்சேர் நயினைநகர் தன்னில் வாழும்
நாகபர மேஸ்வரியே யாட ரூஞ்சல் (5)

மதிமுகமா லினிபனிநீர் வாசந் தூவ
மயிலனிகர் சுகேசைமல ரடிக ணீவ
விதிமுறைமங் கலைமுதலோ ராலஞ் சாற்ற
வேதியர்தம் மகளிர்சுப வசனஞ் சாற்ற
அதிவினய மொடுசுமனை யாடி காட்ட
அன்பினநிந் திதைசுகந்த வருக்க நீட்ட
நதியுலவு நயினைநகர் தன்னில் வாழும்
நாகபர மேஸ்வரியே யாட ரூஞ்சல் (6)

கோலமுறு வைரமணிச் சுட்டி யாட
குலவுமெழின் மாணிக்கத் தோடு மாட
வாலியமுத் தாரமொடு மதாணி யாட
வயங்குவளை தொடியுடனங் கதமு மாட
சாலவொளிர் பாடகமுஞ் சிலம்பு மாட
தண்டையொடு பாதசரந் தயங்கி யாட
ஞாலமுக மெனவிளங்கு நயினை வாழும்
நாகபர மேஸ்வரியே யாட ரூஞ்சல் (7)

முந்துதவ மாதர்துதி கூறி யாட
முகமனொடு புனன்மாதர் முன்னின் றாட
வந்தனையோ டுரகமட மாத ராட
வரையிலுறை மாதரடி வணங்கி யாட
கந்தருவ மாதரிசை பாடி யாட
கருதரிய புவிமாதர் களிகொண் டாட
நந்துதவழ் கழனிசெறி நயினை வாழும்
நாகபர மேஸ்வரியே யாடீ ருஞ்சல் (8)

ஆரணியே யம்பிகையே யாடீ ருஞ்சல்
அந்தரியே சௌந்தரியே யாடீ ருஞ்சல்
பூரணியே புங்கவியே யாடீ ருஞ்சல்
புராதனியே புராந்தகியே யாடீ ருஞ்சல்
காரணியே காருணியே யாடீ ருஞ்சல்
கன்னிகையே கண்மணியே யாடீ ருஞ்சல்
நாரணியே நாயகியே யாடீ ருஞ்சல்
நாகபர மேஸ்வரியே யாடீ ருஞ்சல் (9)

பனிவரையில் வருமுமையே பரையே போற்றி
பகருமற மெண்ணான்கும் வளர்த்தாய் போற்றி
தனிமுதலாம் பரமனிடத் தவளே போற்றி
தணப்பில்பல சக்திவடி வானாய் போற்றி
இனிமைமிகு மாரமுதே கனியே போற்றி
எவ்வுயிர்க்குந் தாயாகி இருந்தாய் போற்றி
நனிகுலவு நயினைநகர் தன்னில் வாழும்
நாகபர மேஸ்வரியே யாடீ ருஞ்சல் (10)

ஆவாழி யந்தணரோ டரசர் வாழி
அரியதவ மகதிகமா கமமும் வாழி
தாவில்குல மங்கையர்கள் கற்பும் வாழி
சைவசமய மும்மறமும் தழைத்து வாழி
பாவார்வெண் ணீறுபஞ்சாட் சரமும் வாழி
பாடியவூஞ் சற்றமிழும் பாரில் வாழி
நாவலர்கள் புகழ்நயினை நகரும் வாழி
நாகபர வேஸ்வரியும் வாழி வாழி. (11)

— ஸ்ரீலஸ்ரீ ம. அமரசிங்கப் புலவர்.

## இக்காலத்தில் பாடப்படும் பாடல்

சீர்வாழி சிவசமயம் வாழி
தேவாதி தேவுமெல்லாத் தேவும் வாழி
பார்வாழி மதிதொறும் மாரி வாழி
பசுக்குலம்வே தியர்தருமம் பலவும் வாழி
நீர்வாழி நயினைநக ருறைவோர் வாழி
நீடாயு ளன்னசொர்ணம் நிறைந்து வாழி
ஏர்வாழி இராமசந்திர மகிபன் வாழி
இனம்வாழி இவ்வூஞ்சல் வாழி மாதோ. (12

பதிவு இல. 5
1969
ஸ்தாபிதம்.
அனலைதீவு - 2



# தொண்டர் சபை அங்கத்தவர்கள்

## ஆரம்பித்தவர்கள்—1944

வ. பசுபதிப்பிள்ளை அவர்கள், புங்குடுதீவு

S. N. கந்தையா ஆசிரியர் அவர்கள், நயினாதீவு

செ. சிவஞானம் D. R. O.
V. K. T. தம்பிமுத்து
கா. க. சிவசிதம்பரம் ஆசிரியர்
க. கணபதிப்பிள்ளை ,,
க. கார்த்திகேசு ,,
நா. விசுவலிங்கம் ,,
வே. கந்தையா ,,
க. பாலசிங்கம் ,,
வே. குலசேகரம் ,,
நா. கந்தசாமி ,,
வே. சிவப்பிரகாசம்
அ. நல்லையா அவர்கள்
வே. பொன்னம்பலம்
கா. ஆறுமுகம்
மு. க. பொன்னம்பலம்
R. R. பூபாலசிங்கம்
சி. நா. மதியாபரணம்
வே. நாகேஸ்வரன்
சி. நா. சண்முகநாதன்
க. பரராசசிங்கம்
அ. சண்முகநாதன்
சி. கந்தசாமி
வை. கந்தசாமி
வே. பரமலிங்கம் J.P.
வே. கந்தசாமி
சி. நடராசா
பொ. பரமலிங்கம்
ச. கணேசரெத்தினம்
சி. குற்றாலலிங்கம்
வை. தெட்சணாமூர்த்தி
இ. சண்முகநாதன்
பொ. கனகரெத்தினம்
நா. க. பரமலிங்கம்
செ. நாகராசா
மு. இலட்சுமணன்
ம. கனகரெத்தினம்
ஆ. விசுவலிங்கம்
நா. சிவப்பிரகாசம்
தி. தம்பிராசா
வி. இராசநாயகம்
பொ. திருச்செல்வம்
சு. சுந்தரேஸ்வரன்



விவேகானந்த அச்சகம், யாழ்ப்பாணம்